Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர் சங்.9:9 அக்டோபர் 2021 No.10

பரிபூரண அன்பு

Love at its ulmost

C.H.Spurgeon

"பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கி றேன்; என்னுடைய அன்பிலே நிலைத் திருங்கள்" யோவான்15:9.

இயேசு நம்மை நேசிக்கிறார் என்பதை முற்றிலும் விசுவாசிப்போம். அதாவது நாம் அவரில் நிலைத்திருந்தால் அவர் நம்மீது எல்லையற்ற அன்பை காண்பிப்பார். நாம் தடுமாற்றமின்றி விசுவாசிக்கவும் அவரது பாசத்தின் அகலத்தை இருதயபூர்வமாக நோக்கிப் பார்க்கவும் நம்மை நடத்துகிறார். அவரது அன்பு மிகவும் அசாதாரண மானது. அவர் பூமியிலுள்ள அன்புகளை பார்ப்பதில்லை. பரலோகத்தின் மிகப் பெரிய அன்பினை பார்த்து: "பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" என்கிறார். பிதா தம்மிடம் காண்பித்த அதேவிதமான அன்பை ஆண்டவர் நம்மிடம் வைத்திருப்பது எத்தனை ஆச்சரியம்! இந்த அடையாளத்தின் மூலம் எத்தனை அற்புதமான உறுதி நமக்கு அளிக்கப்படுகிறது! பிதாவானவர் குமாரனோடு விசேஷித்த ஐக்கியத் தோடிருப்பதாலும் இருவரும் ஒன்றா யிருப்பதாலும் அவரிடம் எல்லையற்ற அன்பைக் காண்பிக்கிறார். அது போலவே இயேசுவும் நித்திய உடன் படிக்கையாக மணவாட்டியாக ஏற்றுக் கொண்ட தமது ஜனங்களிலும் அவ்வள வாக அன்பு வைத்திருக்கிறார்.

அன்பினால் நம்மைத் தெரிந்து கொண்டார்

நமது மீட்பரின் அன்பின் போக்கையும் அதன் நிரூபணத்தையும் பாருங்கள்! அன்பினால் அவர் நம்மைத் தெரிந்து கொண்டார். அவரது தெரிந்து கொள்ளுதலுக்கு ஒரே காரணம் அன்பு என்றால் மிகையாகாது. உபாகம புத்தகத்தில் அவர் இஸ்ரவேலைத் தெரிந்து கொண்டதைக் குறித்து படிக்கி றோம் (உபா.7:6-8 படிக்க)

விசுவாசியே, உலகத் தோற்றத் திற்கு முன்பாகவே அன்பினாலேயே அவர் உன்மீது அன்பு வைத்தார். அவருடைய அன்பை உங்களுக்கு வெளிப்படுத்தும்படி உங்களில் அன்பு கூர்ந்தார். அவரது சாயல் உங்களில் உருவாகவும் அவரே அநேக சகோதர ருக்குள் முதற்பலனாகவும், அதன் மூலம் அவரது தன்மை, சிந்தை, பிதாவினுடைய அன்பு ஆகியவற்றை நம்மோடு பகிர்ந்து கொள்ளவும் அதின் மூலம் பாசத்தில் வளர்ந்து வரும் ஐக்கியத்தில் அவரை அதிகமாய் கிட்டிச் சேரவும் கூடும். அவரது அன்பினாலேயே தன்னை அர்ப் பணிக்கச் செய்து பூரண அன்பை எல்லா வற்றிலும் வெளிப்படுத்துகிறார்.

தேவன் மனிதனானார்

கிறிஸ்துவின் அன்பின் கனிகள் யாவையும் என்னால் விவரிக்க முடியாது. அன்பினால் அவர் உங்களை மன்னித் திருக்கிறார். அதற்காக அவர் மனித ரூப மெடுத்தார். "தேவனுக்குச் சமமாயிருப் பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை" பிலிப்பி.2:6. நம் மேலுள்ள அன்பை வெளிக்காட்டவே இப்படிச் செய்தார். பிதாவை விட்டு சபையாகிய மணவாட்டியோடு ஒரே மாம்சமாயிருக்கவும் அதன் மூலம் தமது உயரிய அன்பின் மாதிரியையும் காண் பிக்க கூடியதாயிற்று. மனித சாயலான படியால்தான் மனிதராகிய நமக்காக எல்லாவற்றையும் செய்யவும் நமக்காகப் பாடு அனுபவிக்கவும் சாத்தியமாயிற்று. மட்டுமின்றி அன்பான சபையோடு நெருங்கிய ஐக்கியத்தையும் இனிய உறவையும் இதன் மூலம் ஏற்படுத்தக் கூடியதாயிருந்தது. அவர் பெத்லகேமில் பாலனாக அவதரித்து நசரேயனாக வாழ்ந் திராவிட்டால் தமது சகோதரனைப் போல எல்லாவிதத்திலும் காணப்பட முடியாதல்லவா? மகிமையின் கர்த்தர் உயர் வானங்களிலிருந்து இறங்கிவந்து துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவிக் கிறவருமான மானிடனாக வாழ்ந்த அவரது அன்பை எண்ணிப் பார்ப்போம்.

அவர் நமக்காக மரித்தார்

மனிதனானது மட்டுமல்லாமல் தமது ஜீவனையும் அவர் நமக்காகக் கொடுத்தார். "ஒருவன் தன் சினேகிதருக் காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத் திலுமில்லை" யோவா.15:13. இவ்வாறு அவர் தமது ஜீவனைக் கொடுத்தது அவரது அன்பிற்கு ஒரு விசேஷித்த நிரூபணமாயிருக்கிறது. மரிப்பது நமக்குரி யதாயிருந்தும் அவர் தாமாகவே தம்மீது அதனை ஏற்றுக் கொண்டார்.

அவரது மரணத்தோடுவேதனை, அவமானம், தனித்து விடப்படும் அனு பவம் போன்றவைகளும் பிணைந்திருந் தன. அவை அவரது மரணத்தை கசப்பாக் கின. நமது மீட்பர் சிலுவையில் மரித்தது அவரது எல்லையற்ற அன்பின் நிரூபணம். இரண்டு குற்றவாளிகள் மத்தியில் சிலுவையிலறையப்பட்டுப் பெருங் குற்றவாளியாக்கப்பட்டார். தனித்து விடப்பட்டவராகவும், மக்களின் நிந்தனைக்குட்பட்டவராகவும் நின்ற தற்குக் காரணம் நமது பாவங்களைத் தமது சரீரத்தில் சுமந்ததுதான். அவர் எவ்வளவாய் நம்மை நேசித்திருக்கிறார். நமக்காகத் தமது ஜீவனைக் கொடுத்த அவரது அன்பை சந்தேகிக்கலாமா? "ஏனெனில் கிறிஸ்துவும், நம்மை தேவனி டத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர் களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடு பட்டார்" 1 பேது.3:18. அவரது அன்பி னால் நாம் அவரது அருகாமையில் வர முடிகிறது. "பூர்வகால முதல் கர்த்தர் எனக்குத் தரிசனமானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைக் சிநேகித் தேன்; ஆதலால் காருண்யத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்" எரே.31:3.

அவரது அன்பின் கனிகள்

அன்பினால் அவர் நமது பாவங் களை மன்னித்திருக்கிறார். தமது அன்பின் கரத்தால் நமது பாவங்கள் அனைத்தையும் கழுவியதை மறந்து விட்டோமா! மிகச்சிறந்த ஆவிக்குரிய மன்னாவால் நித்தம் நம்மை போஷித் திருக்கிறார். "அவருக்குள் நீங்கள் பரி பூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" கொலோ.2:10. உங்கள் தேவைகளை யெல்லாம் அன்பினால் அவர் பூர்த்தி செய்திருக்கிறார். நமது மோட்ச யாத் திரைக்காக நமக்கு பாதரட்சைகளையும், யுத்தம் செய்வதற்கான போராயுதங் களையும், உழைப்புக்கான பெலனை யும், களைப்புக்கான இளைப்பாறுதலை யும் துக்கத்திற்கான ஆறுதலையும் அன்பி னால் அளிக்கிறார். எந்த ஒரு நன்மை யையும் அவர் தடுத்து நிறுத்தி வைக்க வில்லை. எல்லாவற்றிற்கும் காரணம் அவரது அன்பு. உலகம் தரக் கூடாத உள்ளான திருப்தியை கிறிஸ்துவில் பெற்றிருக்கிறீர்கள்.

மேலும் வனாந்தர வாழ்வாகிய நமது பாதையில் இந்நாள் மட்டும் பாதுகாவலுடன் நடத்தி வருகிறார். இருளும் தெளிவற்றதுமான பாதை களில் அவர் அருகில் துணையாக இருக்

(3-ம் பக்கம் பார்க்க)

உள்ளறையில் உடைக்கப்பட்டு, உருவாக்கப்படுகிற மனிதன்தான் கல்லறைக்குப் போகும் கணக்கற்ற மக்களை இரித்துக் கவலையும் கரிசனையும் கொள்ளக்கூடிய மனிதனாயிருப்பான்

– லியோனார்டு ரேவன்ஹில்

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

உங்கள் வீட்டில் கிறிஸ்து இருக்கிறாரா?

ஒரு மூத்த சகோதரனுடைய மகன் புதிய வீடு கட்டி இருந்தார். தன் வீட்டை வந்து பார்த்துவிட்டுச் செல்லும்படி அவர் தன் தந்தையாரை மிகவும் வருந்திக் கேட்க மகனுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும்படியாக அவருடைய தந்தை அங்கு சென்றார். ஒவ்வொரு அறையாக சென்று நன்கு பார்வையிட்டார். இறுதியில் தன் மகனைப் பார்த்து, "மகனே! இவ்வளவு அருமையான வீட்டை நீ கட்டி முடித்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனாலும் நீ கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்பதற்கான அறிகுறிகளோ அல்லது தடயங்களோ உன் வீட்டில் எங்கும் காணப்பட வில்லையே. வேதாகமம் வீட்டில் இல்லை. உன் வாழ்க்கையின் இலட்சியங் கள் என்ன? குறிக்கோள்கள் என்ன என்பதை எடுத்துக் காண்பிக்கும் ஆவிக்குரிய சாதனங்கள் ஏதும் இடம் பெற்றிருக்கவில்லை. உன் வீட்டில் எல்லாம் இருக்கிறது, ஆனால் கிறிஸ்துவையோ உன் வீட்டில் எங்கும் காண முடியவில்லையே" என்று வருத்தத்துடன் கூறினார். ஆம், ஒரு விசுவாசியின் வீட்டில் எது இருந்தாலும் சரி எது இல்லையானாலும் சரி, கிறிஸ்து இடம் பெற்றிருக்க வேண்டும். கிறிஸ்துவின் வருகை அங்கு உணர்த்தப்பட வேண்டும். உங்கள் வீட்டில் என்ன இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள், நீங்கள் எத்தகையவர் என்பதை நான் உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். நீங்கள் தேவனுக்கு என்று ஜீவிப்பவரா அல்லது இம்மைக் காக மாத்திரம் ஜீவிப்பவரா என்றும் சொல்லிவிட முடியும். கிறிஸ்தவம் வீட் டில் ஆரம்பித்து வீட்டில்தான் முடிகிறது (யோவான் 14:2,3; வெளி.3:20)

வாக்குத்தத்தம்

பயப்படாதே; நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலட்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்.

இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்க மான இரக்கங்களால் உன்னை சேர்த்துக் கொள்வேன்.

அற்ப காலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப் பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார் ஏசாயா 54:4-8.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகரா யிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

Prayer is asking and receiving ஜெபம் என்பது கேட்பதும், பெற்றுக்கொள்வதும் என்ற புத்தகத்தை மிகவும் வயதான பரிசுத்தவான் **ஜான் ஆர் ரைஸ்** (John R. Rice) என்பவர் எழுதி யிருந்தார். இவரே 'கர்த்தரின் பட்டயம்' (Sword of the LORD) என்கிற ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர் ஆவார். எனது தகப்பனாருக்கு நீண்ட காலமாக வரும் இந்த ஆங்கில பத்திரி கையை அவர் பத்திரமாக பைன்ட் பண்ணி வைத்திருந்தார்.

எனது நண்பர் ஒருவர் சென்னையில் பணிபுரியும் போது, அவரது குடும்ப வாழ்க்கையில் மனைவியால் பெரும் புயல் வீசினது. அப்பொழுது அவர் **வருகையின் தூதன்** பழைய பத்திரிகைகளை படித்து ஆறுதல் அடைந்ததாக தொலை பேசியில் என்னிடம் கூறினார்.

ஜூலை மாத பத்திரிகையில் "நீங்கள் கேட்டால் நான் செய்வேன்" என்ற கட்டுரையை படித்திருப்பீர்கள். ஆண்டவர் செய்த அற்புதத்தையும் அறிவீர்கள். அந்த கட்டுரையால் தொடப்பட்ட ஒரு தேவனுடைய பிள்ளை ஒரு கடிதம் எழுதி யிருந்தார். அதில் இரண்டு வரிகளை மாத்திரம் எழுதுகிறேன்:

"I was touched by your article in July 2021 "**If you ask I will do**" by Lousia Vaughan in Page 5"

கடிதத்துடன் மிகவும் உதாரத்துவமான காணிக்கையும் காசோலை வழியாக அனுப்பியிருந்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். **இந்த காணிக்கைகள் வருகையின் தூதன் அச்சிடவும், தபால்தலைகள் வாங்கப்பட்டு பத்திரிகை தபாலில் அனுப்பபடவுமே பயன்படுத்தப் படுகிறது.**

கண்புரையினால் எனது கண்பார்வை மிகவும் பாதிக்கப்பட்டு, 2020-ம் ஆண்டு பெப்ரவரி மாதமே அறுவை சிகிட்சை செய்யப்பட வேண்டும் என்று கண் மருத்துவர் கூறி னார். கொரோனா காலமானதால் இதுவரை ஆஸ்பத்திரிக்குச் செல்லவில்லை. பிழை திருத்துவதற்காக தூதனை மிகவும் பெரிதாக அச்சிட்டு (Enlarge) இரண்டு முறை பிழை திருத்து கிறேன். இத்துடன் தோள்பட்டை வலி ஏற்பட்டு, கைகளை சரியாக தூக்கமுடிவதில்லை. இரவு நேரத்தில் மிகவும் வேதனை யாக இருக்கிறது. இதுபோன்ற வேறு சில உடல் பிரச்சனைகளும் உள்ளது. இந்த சூழ்நிலையிலும் 2022-ம் ஆண்டுக்கான 12 உபவாச ஜெபங்களை தேவ ஒத்தாசையோடு ஒழுங்கு செய்து வருகிறோம். எனக்கு மிகவும் பிரியமான வாசகர்கள், ஜெபத்தில் நினைவு கூரவே இவைகளை எழுதுகிறேன்.

2021 அக்டோபர் மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். மூன்று குறிப்புகளை முதலாவது எழுதுகிறேன்.

1. தூதன் வரவில்லை

ஒரு சகோதரன் அலுவலகத்திற்கு போன் பண்ணி மே மாதத்திற்கு பிறகு பத்திரிகை வரவில்லை என்று கூறினார்கள். அதற்கு பதிலாக, "ஜூன் மாத பத்திரிகை அச்சிடவில்லை. ஜூலை, ஆகஸ்ட் மாத பத்திரிகைகளும் தாமதமாகவே அனுப்பப்பட்டது" என்று அலுவலகத்திலிருந்து அறிவிக்கப் பட்டது. தூதன் வாசகர்கள் அலுவலகத்துடன் தொடர்பில் இருக்குமாறு பட்சமாய் கேட்கிறேன்.

2. போஸ்ட் உமன் அனுப்பிய பணம்

ஒரு மணியாடரில் post women முகவரி இருந்தது. தபால் துறையினரும் தூதன் படிக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டேன். நடந்தது என்ன? ஒரு தூதன் வாசகி ரூபாய் 500 பணம் கொடுத்து, தூதன் அலுவலக முகவரியையும் கொடுத்திருக்கிறார்கள். அந்த post women அவருடைய **சொந்த முகவரியில்** பணம் அனுப்பியிருக்கிறார்கள்.

அன்பானவர்களே, ஒரு துண்டு காகிதத்தில் பத்திரிகை யார் பெயருக்கு வருகிறதோ அந்த பெயரையும், உங்கள் பத்திரிகை பதிவு எண்ணையும் எழுதிக் கொடுங்கள். உதாரணமாக,

(6-ம் பக்கம் பார்க்க)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

கிறார். அவரது கோலும் தடியும் நம்மைத் தேற்றுகிறது. நீங்கள் தப்பிப்போன ஆடுகளாயிராமல் இருப்பதற்குக் காரணம் நமது நல்ல மேய்ப்பர் அவரது பாதையில் நடத்தியதுதான். எத்தனை முறை அவர் உங்களை விடுவிக்கிறவரும், உதவி செய்கிறவருமாயிருந்திருக்கிறார். கிருபையாக அவர் நமது பெலவீனங்களில் உதவி செய்து, இருளில் வெளிச்சமாகவும், பயம் நீக்குகிறவராகவும், நம்பிக்கை இழக்காமலும் கிருபையாய் வழிநடத்தியிருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் பாவத்தில் விழாமல் பாதுகாத்திருக்கிறார். நிச்சயமாகவே நன்மையும் கிருபையும் வாழ்நாள் முழுவதும் உங்களைத் தொடரும்.

பெற்றோர், குழந்தைகள், கணவன், மனைவி, மிகச்சிறந்த நண்பர் யாவரைக் காட்டிலும் தமது இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களை அவர் அதிகமாக நேசிக்கிறார். ஆத்துமாவே, அவர் உன்னை நேசிப்பதால் நீயும் எப்போதும் அவருடைய அன்பில் பரவசப்படு.

நீங்கள் இப்போது அவருடன் நெருங்கிய உறவுடையவர்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன். ஒரு அஸ்திபாரத்தில் கற்கள் சிமெண்டால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது போல நீங்கள் அவருடன் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரு மணவாட்டி மணவாளனோடு இணைக்கப்பட்டிருப்பது போன்ற ஜீவனுள்ளதும் அன்பு நிறைந்ததும் நிலையானதுமான ஒரு இணைப்பினால் அவரோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். உடன்படிக்கையின் தலைவராகிய அவரோடு அவரது திட்டத்தில் நீங்கள் உட்பட்டவர்கள். அவர் பாவமாக்கப்பட்டு நம்மை நீதிமான்களாக்கினார். தேவனுடைய திட்டங்களில் ஆண்டவராகிய இயேசுவினால் நீங்கள் பொதியப்பட்டிருக்கிறீர்கள். அதுவே அவருடைய அன்பு. இயேசுவின் எதிர்காலமே உங்களது எதிர்காலம். அவர் இருக்குமிடத்தில் நீங்கள் இருக்க வேண்டும்.

அன்பானவர்களே, அவரை நேசிக்கிற நீங்கள் நிலையானதும் அழிவில்லாததுமான இணைப்பில் அவரோடு இணைந்திருக்கிறீர்கள். "மரணமானாலும் ..... நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" ரோமர் 8:38-39. கிருபைக்கும் மகிமைக்கும் உத்தரவாதமாயிருப்பது நித்திய ஒற்றுமை. நாம் கலியாண விருந்துக்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். எனவே நமது விளக்குகள் எரிந்து கொண்டிருக்க வேண்டும். நித்திய மகிழ்ச்சிக்கான தெய்வீக நம்பிக்கையால் உங்களைத் தேற்றிக் கொள்ளுங்கள். பரத்திலிருந்து உலகுக்கு வந்த அவரது அன்பு நம்மை உலகிலிருந்து பரத்துக்கு எடுத்துச் செல்லக் கூடியது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்காக அன்பு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை இருதயம் உணர்ந்து கொள்ள முடியாது.

தனிப்பட்டதும் அளவிடப்படக்கூடாததும்

ஆண்டவராகிய இயேசு தமது ஜனங்கள் ஒவ்வொருவரையும் அளவில்லாமல் நேசிக்கிறார். அவருடைய இருதயம் முழுவதும் ஒவ்வொரு வருக்கும் நேராகவுமிருக்கிறது. நாம் அனேகராயிருப்பதால் யாரையேனும் அவர் தவறவிடுவதுமில்லை. நாம் அனேகராக அவருக்குச் சொந்தமாயிருப்பதால் அவர் அனைவரையும் நேசிக்கும் நேசம் நம்மிலும் ஆசீர்வாதமாகப் பெருகுகிறது.

இந்த அன்பு அளவில்லாததும் எல்லையற்றதுமாகும். அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அளவில்லாமல் அவர் நேசிக்கிறார். கடைசி மட்டும் முடிவின்றி அவர் நேசிக்கிறார். அந்த அன்பில் ஒரு பகுதியை மட்டும் நாம் உணருகிறோம். இந்த அன்பின் கடலுக்குக் கரையோ ஆழமோ இல்லை. இயேசு நம்மை சர்வசக்தியுடனும், நித்தியமாகவும், முடிவில்லாமலும் நேசிக்கிறார்.

கிறிஸ்துவின் அன்பின் தாக்கம்

நமது இருதயங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் அன்பு சர்வலோக நிவாரணியாயிருக்கிறது. அனைத்து வியாதிகளுக்கும் கிறிஸ்து மருந்தாயிருக்கிறார். ஆனாலும் அதற்கும் மேலானவராயிருக்கிறார். அவர் குணமாக்கி நிரப்புகிறார்! நிரப்பி அழகுபடுத்துகிறார், அழகுபடுத்தி நிலைப்படுத்துகிறார். நிலைப்படுத்தி பரிபூரணப்படுத்துகிறார். மனிதர்மேல் அவரது அன்பு அற்புதமாகக் கிரியை செய்கிறது. அவரது அன்பு விசுவாசிக்கப்பட்டு உங்கள் இருதயங்களில் உணரப்பட்டால் அது உங்களில் தாழ்மையைத் தரும். பெருமை நிறைந்த சுயம் வெளியேறி இனிய அன்பு உள்ளே வரும். அந்த அன்பின் வல்லமையால் மாம்சம் சாகிறது. அந்த அன்பில் ஆவி வாழுகிறது. அறிவுக் கெட்டாத அவரது அன்பு எனது பெருமையை வெளிப்படுத்தும்போது நான் பெருமையோடிருக்க முடியுமா? அவரது மகிமையைக் காணும்போது தரையில் விழும்படியான உணர்ச்சி ஏற்படுகிறது. "அவர் சொன்ன வார்த்தையினால் என் ஆத்துமா சோர்ந்து போயிற்று" உன்னத.5:6. கிறிஸ்துவின் அன்பு பெரு வெள்ளமாக ஆத்துமாவில் புரண்டு வரும் போது, சுயத்தை அடித்துச் செல்லுகிறது.

அன்பு உருக்கும் தன்மையுடையது. நியாயப்பிரமாணம் சம்மட்டியைப் போல உடைக்கும் தன்மையுடையது. இவ்வாறு இருதயம் உடைக்கப்படும் போது அனைத்துத் துண்டுகளும் நெருப்புக்கல் துண்டுகளாயிருக்கின்றன. இயேசுவின் அன்பு நம்மில் கிரியை செய்யும் போது அது நம்மைக் கரையச் செய்துவிடுகிறது. நெருப்புக்கல்லை சதையாக மாற்றிவிடுகிறது. இயேசு தமது காயப்பட்ட கரங்களால் ஒரு இருதயத்தைத் தொடும்போது அது மென்மையாக மாறிவிடுகிறது.

இயேசுவின் அன்பு கழுகி சுத்திகரிக்கும் தன்மையுடையது. கிறிஸ்துவின் அன்பில் வாழும் போது பாவத்தின் மீதுள்ள ஆசை கொல்லப்படும். கிறிஸ்துவை நேசிக்கிறவர்கள் பாவத்தை வெறுப்பார்கள். கிறிஸ்துவுக்காக எதை விட்டுவிடுவது? கிறிஸ்துவுக்காக எதைச் செய்வது? என்று நம்மை நாமே கேட்க ஆரம்பிப்போம். நமது ஆத்துமாவில் சொரியப்பட்ட இயேசுவின் அன்பு சுத்திகரித்து பரிசுத்தத்தால் வாசனை யூட்டுகிறது. அவரது அன்பு, நறுமணம் வீசும் மரக்கட்டை எரிக்கப்படுவது போல எரிந்து பாவத்தை அழித்து நறுமணம் வீசச்செய்யும் ஜினிபர் கரிக்கட்டைகளைப் போல எரிந்து, இருதயத்தைச் சுத்தப்படுத்துவது போல எந்தச் சூளையும் இருதயத்தைச் சுத்தப்படுத்துவதில்லை. அன்பின் பாதை பரிபூரணத்தில் முடியும். பரிசுத்தர் இயேசுவால் கவரப்பட்ட இருதயம் பாவத்தால் அவரை துக்கப்படுத்துவதில்லை.

கிறிஸ்துவின் அன்பின் இனிய உணர்வு நம்மை பலப்படுத்துகிறது. அன்பு மரணத்தை விட வலியது. வாழ்வின் கடமைகளை ஆற்ற நம்மை பலப்படுத்துகிறது. கிறிஸ்துவின் வீரர்கள் ஒரு போதும் பயப்படுவதில்லை. அவர்களது தைரியத்தின் இரகசியம் இயேசுவின் அன்பு என்று அறிக்கையிடுவார்கள்.

இதனால்தான் நாம் பிறருடன் பரிவுடன் நடக்கிறோம். தரித்திரமும் அழிவுக்குரியதுமான உலகுக்காக நாம் பரிதாபம் கொள்கிறோம். எனவே மானிட ஆத்துமாக்களை நேசிக்க கிறிஸ்து நம்மை எப்படி நேசித்தார் என்று கற்றுக்கொள்வோம். தீமை செய்கிறவர்களையும் நேசிப்போம். இந்தப் பாவ உலகுக்காக கண்ணீர் சிந்த விரும்பினால் இயேசு எவ்வாறு கண்ணீர் விட்டார் என்று பாருங்கள். ஏழை எளியவர்கள் துன்புற்றோர் ஆகியோருக்கு உதவி செய்ய எப்போதும் ஆயத்தமாயிருக்க இத்தகைய அன்பு நிறைந்த ஆண்டவரை நெருக்கமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த அன்பு தான் தேவனுக்காக உத்தம ஆர்வத்தைப் பற்றி எரியச் செய்கிறது. மனிதருக்கு நன்மை செய்யவும் தூண்டுகிறது. இப்படி உற்சாகமாயிருப்பது எப்படி என்று அநேகருக்குத் தெரிவதில்லை. ஆயினும் இன்னும் காலையிலிருந்து இரவு வரை அக்கினித் தூண்களாக செயல்படுகிற பக்தர்கள் இன்றுமிருக்கிறார்கள். ஆண்டவரின் அன்புதான் அவர்களுக்குள் பரலோக அக்கினியாயிருக்கிறது.

இந்த அன்பு விசுவாசிகளை சந்தோஷத்தால் நிரப்புகிறது. அவர் என்னை நேசிக்கிறார் என்பது எத்தனை பெரிய சந்தோஷம். இந்த உறுதி

(4-ம் பக்கம் பார்க்க)

ஜெபத்தின் வல்லமையில் சரித்தானுக்கு மனிதரைவிட அசையாத நம்பிக்கை உண்டு, ஆனால் அவன் ஜெபிப்பவன் அல்ல, ஜெபத்தினால் பாதிக்கப்படுபவன் – கே.கே.சிங்

(3-ம் பக்க தொடர்ச்சி)

சிறையை பரதீசாகவும், துக்கத்தைப் பரலோகமாகவும் மாற்றும்.

அவரது அன்பில் நிலைத்திருங்கள்

கிறிஸ்துவின் அன்பு ஒன்றே உங்கள் நோக்கமாயிருக்கட்டும். வாழ்வும் அன்பும் ஒன்றாய் செயல்படட்டும். கிறிஸ்துவின் அன்பை நீங்கள் அதிகமாக சிந்திக்கக்க கூடாதவர்கள். ஆனால் அந்த அன்பில் மூழ்கியிருங்கள். இனி நானல்ல, கிறிஸ்துவே என்று சொல்லும் அளவுக்கு அந்த அன்பிலே தரித்திருங்கள் கலா.2:20.

ஒருமுறை நீங்கள் இந்த அன்பில் மூழ்கிய பின் அதில் தொடர்ந்து நிலைத் திருங்கள். கிறிஸ்து இன்று உங்களை நேசித்துவிட்டு நாளை தூரப்படுத்துகிற வரல்ல. அவரது உத்தமம் நிலைத்திருக் கும்போது உங்கள் விசுவாசம் ஏன் நிலை யற்று இருக்க வேண்டும்? ஏன் இன்று ஆண்டவருக்குள் சந்தோஷமாகவும் அடுத்த நாள் சந்தோஷமற்றும் காணப் பட வேண்டும்? அக்கினியினருகிலிருக் கும் நாம் அனலாயிருக்க வேண்டுமே. அவரது அன்பில் நிலைத்திருங்கள்.

இதைவிட மேன்மையானதும் பரிசுத்தமானதும் நமது முத்திரை வாக் கியம் : "என்னுடைய அன்பிலே நிலைத் திருங்கள்" என்பதாகும் யோவா.15:9. நான் இருக்கிற நிலையிலிருந்து கிருபை யை நாடி வளர, வளர்ச்சி பெற முயற்சிப் போம். அவருடைய அன்பிலே நிலைத் திருப்பது கடினம் என்று சொல்ல வேண் டாம். அது ஒரு சந்தோஷமான வாய்ப்பு. இதை நமது பெலனால் பெற முடியாது. நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருந் தால் சகல வல்லமையும் உங்களுக்குக் கொடுக்கப் படும். இதை நடைமுறைப்படுத்துங்கள்.

அன்பில் பெருகுங்கள்

Abound in love

Rich Carmicheal

அன்பு ஆண்டவருக்கு மிகவும் முக்கியமானது என்று காண்பிக்கும் சில வசனங்களை கவனிப்போம்.

"இயேசு அவனை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமா வோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாண முழுமையும் தீர்க்க தரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்" மத்.22:37-40.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களா யிருந்தால்; அதினால் நீங்கள் என்னு டைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்" யோவா.13:34-35.

"..... அன்பு நியாயப்பிரமாணத் தின் நிறைவேறுதலாயிருக்கிறது" ரோமர் 13:10.

"இப்பொழுது விசுவாசம் நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத் திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" 1 கொரி.13:13.

"இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்" கொலோ.3:14.

"அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக் கிறார்" 1 யோவா.4:8.

"..... தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக் கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" 1 யோ.4:16.

இந்த சத்தியங்களை மனதில் கொண்டவர்களாகிய நாம் நம்மில் காணப்படும் அன்பின் அளவைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டாமா? இது கடைசி நாட்களுக்குக் கிறிஸ்து கொடுத்திருக்கும் எச்சரிப்புக்கும் உரியதா யிருக்கிறதல்லவா! "அக்கிரமம் மிகுதியா வதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம்" மத்.24:12. பவுல் இதனைக் குறித்து குறிப்பிடும்போது: "மனுஷர்கள் தற்பிரியராகவும், பணப்பிரியராகவும், வீம்புக்காரராகவும், அகந்தையுள்ளவர் களாகவும், தூஷிக்கிறவர்களாகவும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர் களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர் களாயும், இச்சையடக்கமில்லாதவர் களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரை பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களா யும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர் களாயும் இருப்பார்கள்" 2 தீமோ.3:2-5. அன்புக்கு எதிரான பொறுமையின்மை, சுயநலம், முரட்டுத்தனம், பாகுபாடு, கோபம், பகைமை, வெறுப்பு போன்ற பண்புகள் நிறைந்த கலாச்சார கால கட்டத்தில் வாழ்கிறோமல்லவா?

சபையின் நிலை என்ன? எபேசு சபைக்குச் சொன்னது போல 'நீ ஆதியி லிருந்த அன்பை விட்டுவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு'. வெளி.2:4-ல் சொல்லப்பட்டது போல சபைகளைக் குறித்து சொல்லும் நிலை இல்லையா? ஒருவேளை நற்கிரியை களும் சத்தியத்திற்கும் தூய்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படலாம். ஆனாலும் அன்பு தணிந்துவிட்டதே. சபை விழுந்துவிட்டது. மனந்திரும்புவது மிகவும் அவசரமாயிருக்கிறது. எனவே செய்ய வேண்டியதென்ன? "ஆகையால் நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென் பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" வெளி.2:5. சுருங்கக் கூறினால் அன்பு இல்லையென்றால் நாம் ஒன்றுமில்லை. நமது விசுவாசம் நற்கிரியைகள் யாவும் பயனற்றுப் போகும் 1 கொரி.13:1-3.

அன்பின் தெளிவான அடையாளங்கள்

நமது அன்பு ஆண்டவருக்கு நேராக எவ்வளவு உறுதியாயிருக்கிறது என்று நம்மையே கேட்போம். மனிதருக்கு நேராக நமது அன்பு எப்படிக் காணப்படுகிறது! கர்த்தரை நமது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் நேசிக்கிறோமா? **அவருடன் நெருங்கிய உறவு வைக்கிருக்கிறோமா? அவரை ஆராதிக்கவும், ஜெபிக்கவும் வேதத்தை வாசிக்கவும் அதிக சமயத்தை ஒழுங்காகச் செலவு செய்கிறோமா?** அவருடைய கட்டளை களுக்குக் கீழ்ப்படிகிறோமா? அவரிடம் காண்பிக்கும் அன்பு உறுதியாகவும் உற்சாகமாகவுமிருக்கிறதா அல்லது குறைந்து காணப்படுகிறதா?

நமது வாழ்வுகள் அன்பின் அடையாளங்களாயிருக்கின்றனவா? நாம் பொறுமை, இரக்கம், பரிவு, தாழ்மை, உத்தமம், உண்மை, பிறர் மீதுள்ள கருணை, அடக்கம், சுயநல மின்மை போன்றவற்றால் நிறைந்திருப் பதை மக்கள் காணமுடியுமா? மன்னிக் கும் ஆவியும், சகிக்கும் தன்மையும் அடிமையின் இருதயமும் நம்மில் உண்டா?

பிறரை நாம் நேசிப்பது நம் வாழ்வில் கிரியைகளால் வெளிப்படுத்தப் படுகிறதா? அன்பின் விளக்கத்திற்கேற்ப நமது வாழ்வு காணப்படுகிறதா? (1 யோ.3:16-18 படிக்க) பரிசுத்தவான் களுக்கு ஊழியம் செய்வதிலும் உதாரத் துவமாய்க் கொடுப்பதிலும் உழைப்ப திலும் நாம் எப்படி காணப்படுகிறோம். இழந்து போனவர்கள் தேவையிலிருப் போர் போன்றவர்களுக்காக அக்கரைப் படுகிறோமா?

நம்மில் கிறிஸ்துவின் அன்பு

மேற்கூறியவற்றில் நாம் குறைவு படுவோமானால் அவரிடம் மனந்திரும்பி வந்தால் அவர் நம்மை நிரப்பி, அவரது அன்பினால் நிரம்பி வழியச் செய்வார். அவர் 1 தெச.3:12-ன் படி ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

மன்றாட்டு ஜெபம் இரத்தம் சிந்த துணிந்த ஜெபம்.
அது அக்கினியை இறக்குகிறது. அது ஜீவனை கொடுக்கிறது.
அது தேவனையே கொண்டு வருகிறது
– சாமுவேல் சாட்விக்

(4-ம் பக்க தொடர்ச்சி)

கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத் தோங்கவும் செய்வார். நாம் ஒரு புதிய அருள்மாரிக்காக அவரிடம் கேட்கலாம். "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற படியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" ரோமர் 5:5. தூய ஆவியானவரைச் சார்ந்து, அவர் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றை உருவாக்குவோம் கலா.5:22-23.

"நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" யோவா.17:26 என்று பிதாவிடம் இயேசு ஜெபித்தார். பிதாவின் அன்பு நம்மில் இருக்கிறது; கிறிஸ்துவும் நம்மிலிருக்கிறார். அவரது கிருபையாலும் வல்லமையாலும் வாழவும் அன்பு கூரவும் கடவோம். இவ்வாறு மற்ற வர்கள் கிறிஸ்துவை நம்மில் காணவும் அவரது அன்பை ருசிக்கவும் செய்வோம்.

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவை யில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த, தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத் திருக்கிறேன்" கலா.2:20.

அன்பு என்ற அதிக மேன்மையான வழி

Love - The more excellent way

Alexander Strauch

"இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக் கிறேன்" 1 கொரி.12:31.

டிவைலைட் மூடி என்ற 19-ம் நூற்றாண்டின் பில்லிகிரகாம் தனது வாழ்வை மாற்றிய, அன்பைக் குறித்த ஒரு சம்பவத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார். ஹென்றி மூர்ஹவுஸ் என்ற 27 வயதான பிரிட்டிஷ் சுவிசேஷகன் மூடியின் சபையில் ஒரு வாரம் பிரசங்கித்தார். எல்லாரும் ஆச்சரியப்படும் விதமாக அவர் 7 பிரசங்கங்களை வரிசையாக யோவான் 3:16-லிருந்து எடுத்துப் பேசினார். தேவன் உலகத்தை நேசித்தார் என்பதனை நிரூபிக்க அவர் ஆதியாகம புத்தகத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை குறிப்பிட்டார். மூடியின் மகன் மூர்ஹவுஸ் பிரசங்கத்தால் தனது தந்தைக்கு ஏற்பட்ட தாக்கத்தை இவ்வாறு விவரிக்கிறார்:

ஆறு நாட்கள் இரவில் இதே தலைப்பில் அவர் பிரசங்கித்தார். ஏழாம் நாள் இரவில் அவர் பீடத்திற்குச் சென்றார். எல்லாருடைய கண்களும் அவர் மேலிருந்தன.அவர் பேசத் தொடங் கினார். அன்பான நண்பர்களே, ஒரு புதிய பகுதியில் பிரசங்கிப்பதற்காக பகல் முழுவதும் நான் தேடினேன். ஆனால் நான் முன்பு பேசியதைவிட சிறந்த எந்தப் பகுதியும் எனக்குத் தென்பட வில்லை. எனவே நாம் மறுபடியும் யோவான் 3:16-ம் வசனத்தில் கூறப்பட் டிருக்கும் "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என்ற அடிப்படையில் பேசுகிறேன். நண்பர்களே ஒரு வாரம் முழுவதும் தேவன் எவ்வளவாய் உலகை நேசித்தார் என்பதை நான் விவரிக்க முயன்றும் எனது திக்குவாயாலும் மந்தநாவாலும் அதை என்னால் விவரிக்க முடியவில்லை. யாக்கோபு தரிசனத்தில் கண்ட ஏணி கிடைத்தால் நான் அதில் ஏறி பரலோகம் சென்று காபிரியேல் தூதனிடம் "தேவன் எவ்வளவாய் உலகத்தை நேசித்தார் என்று சொல்" என்று கேட்டால்அவனும் யோவான் 3:16-யே கூறியிருப்பான் என்றார்.

தனது கண்ணீரை அடக்கக் கூடாமல் மூர்ஹவுஸ் தேவனுடைய அன்பைக் குறித்தே பேசினார். தேவன் பாவிகளாகிய நம்மை இரட்சிக்க தனது ஒரேகுமாரனை அனுப்பி சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார் என்று விவரித்தார். மூடி இவ்வாறு அறிக்கை யிட்டார். "நான் இதுவரை அவர் உல கத்தை இவ்வாறாக நேசித்ததை அறிந் திருக்கவில்லை. எனது இருதயம் உருகி விட்டது. எனது கண்ணீரை நான் கட்டுப் படுத்த முடியவில்லை. அந்தச் செய்தி தூர தேசத்திலிருந்து வந்தது போல் உணர்ந் தேன். அதை உட்கொண்டேன். அது போல கூடியிருந்த மக்களும் அச்செய்தி யால்உணர்த்தப்பட்டனர். தேவனுடைய அன்பைப் போல நம்மை இழுத்துக் கொள்ளக் கூடியது வேறொன்றுமில்லை என்பதை நான் ஆணித்தரமாகக் கூறுகிறேன்"

மூர்ஹவுசினுடைய பிரசங்கத் தால் தாக்கமடைந்த மூடி அன்பின் தத்துவத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவரது வாழ்வையும் பிரசங்கத்தையும் மாற்றினார். அவர் தம்மைக் குறித்துப் பின் நாட்களில் 'அன்பு' என்ற வார்த் தையை நான் எடுத்துக் கொண்டேன். அநேக வாரங்கள் இதனைக் கற்றுக் கொள்ள வேதவசனத்தில் படிக்க ஆரம் பித்தேன். இப்போது மக்களை நேசிக்கா மல் இருக்க என்னால் முடியவில்லை. இப்போது அன்பை ருசித்த நான் என்னோடு தொடர்புள்ள யாவருக்கும் நன்மை செய்ய ஆரம்பித்தேன்.

இந்த அன்பை முழுமையாகப் பெற்றுக் கொண்டேன். அது என் விரல்கள் வழியாகவும் ஓட ஆரம்பித்தது. நீங்களும் அன்பு குறித்த வேதவசனங் களைப் படியுங்கள். நீங்களும் முழுமை யாக அதனை அறிந்து கொள்ள முடியும். நீங்கள் உங்கள் உதடுகளைத் திறக்கும் போது கூடுகைகளில் தேவ அன்பு பிரளய மாகப் பாய்ந்து ஓடும். சபைப் பணி செய்கிறீர்களா, இந்த அன்பு இல்லாமல் அப்பணியினைச் செய்யமுடியாது. ஒரு மருத்துவரோ, வழக்கறிஞரோ தங்கள் பணியை அன்பில்லாமல் செய்யமுடியும். ஆனால் தேவபணியினைச் செய்ய அன்பு நிச்சயம் வேண்டும்.

எனவே D.L. மூடி "தேவ பணி அன்பின்றி செய்ய முடியாது" என்று கூறியது வேத அடிப்படையில் மிகவும் சரியானது. இதை 1 கொரி.13-ம் அதி காரத்தில் படித்துப் பயன் பெறுவோம்.

மிக மேன்மையான வழி

அப்போஸ்தலனாகிய பவுல் மிஷனெறிகளின் மிகச் சிறந்த முன்னோடி, வேதபோதகர், சுவிசேஷ ஊழியர், சிறந்த கல்விமான், விசுவாச வீரன் என்பதெல்லாம் அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. ஆனாலும் அவரது திறமை, பற்பல தாலந்துகள், தியாகமான அர்ப்பணிப்பு ஆகியவை அன்பினால் முழுவதும் நிறைந்திரா விட்டால் அவை பயனற்றவை என்று அவர் அறிந்திருந்தார். புதிய ஏற்பாட்டின் புத்தகங்களை எழுதிய எவரும் அன்பின் மாட்சிமை குறித்தோ, அதன் தலைமைத் துவ எடுத்துக்காட்டுகளைக் குறித்தோ பவுலைக் காட்டிலும் சிறப்பாக எழுத வில்லை. வாழ்நாள் முழுவதும் அவர் செய்த ஊழியம், அவர் எழுதிய நிருபங் கள் மூலமாக தேவன் தமது சபைக்கும் அதின் தலைவர்கள் போதகர்கள் போன்ற யாவருக்கும் அன்பின் தலைமைத்துவத் திற்கான மாதிரியை அளித்திருக்கிறார். 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தைப் போலமிகத் தெளிவாகவும்,அழுத்தமாகவும் மக்களை வழி நடத்துவதற்கும், போதனை செய்வதற்கும் அன்பு எவ்வளவு முக்கியம் என்பதைக் குறிப்பிடும் பகுதி வேத புத்தகத்தில் வேறெங்குமில்லை.

ஆவிக்குரிய வரங்களைக் குறித்துப் பிரிவினை கொரிந்து சபையில் ஏற்பட்டபடியினால்தான் அதற்குப் பதிலடியாகப் பவுல் இதனை எழுதினார். ஆவிக்குரிய வரங்களைக் குறித்த தவறான கண்ணோட்டம், அதன் மூலம் தங்களையே கெடுத்துக் கொள்ளும் நடைமுறைகள் இவற்றைத் திருத்து வதற்காக பவுல் வாழ்வதற்குரிய மேன்மையான வழியைக் காண்பிக்க முயற்சித்தார். இயற்கைக்கு மேலான வரங்களை விடவும் மேலானது அன்பு என்று அவர் குறிப்பிடுகிறார்.

பவுல் குறிப்பிடும் அன்பு குறிப் பாக உடன் விசுவாசிகளுக்குக் காண்பிக் கப்படும் அன்பாகும். இந்த அன்பு இயேசுக் கிறிஸ்து தமது சீஷருக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுத்த போது கூறப்பட்டதாகும். யோவான் 13:34, 35 வசனங்களில் இயேசு தமது சீஷரிடம், "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பா யிருங்கள் என்ற புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றார்.

(6-ம் பக்கம் பார்க்க)

மன்றாடும் மக்களால் மாத்திரமே பிரதானத்தின் வாசல்களை அசைக்க இயலும்- ஜான் வெஸ்லி

(5-ம் பக்க தொடர்ச்சி)

இந்த அன்பு தன்னை முற்றிலுமாக பிறரது நன்மைக்காக அர்ப்பணிக்கும் தன்மையுடையது. இயேசு இந்த விதமான புதிய கட்டளையை தாழ்மையுடன் சீஷர்களுடைய கால்களைக் கழுகி முன்னுதாரணமானார் யோவா.13:4-17. மேலும் பிறருக்காகத் தமது ஜீவனை சிலுவை மரணத்தின் மூலம் கொடுத்தார். யோவான் இதைக் குறித்து, "அவர் தம் முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்த தினாலே, அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" 1 யோவா. 3:16 என்கிறார்.

அன்பே மேன்மையான வழி என்பதைக் குறித்த எந்த சந்தேகத்தையும் அமைதிப்படுத்தவும் கொரிந்தியருடைய ஆவிக்குரிய வரங்களைக் குறித்த தவறான எண்ணங்களைத் தூக்கிப் போடவும் பவுல் தமது அனைத்து உரைநடைதிறமையையும் பேச்சுத் திறமையையும் காண்பித்துள்ளார். மேலும் இதிலும் மேலான வழியைக் காண்பிக்கிறேன் என்று தொடர்ந்து 1 கொரி.12:31 முதல் 13:3 வரை எழுதிக் கொண்டே போகிறார். படிக்க.

அன்பில்லாவிட்டால் பரலோக பாஷையும் ஓசையிட்டுத் தொந்தரவு செய்வது போலிருக்கும்

ஆவியின் வரங்களின் நோக்கம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கட்டுவதாகும். ஆனால் கொரிந்தியருக்குக் கொடுக்கப்பட்ட பாஷைவரம் அவர்களில் பெருமையையும் சபையாகிய சரீரத்தில் ஒழுங்கீனத்தையும் ஏற்படுத்தியது. சுயாதீன உள்ளம் கொண்ட கொரிந்தியர் வரங்களை தங்கள் சுய பெருமைக்கும் தங்களைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்காகவும் பயன்படுத்தினார்கள். இதனால் சபைக்குள் பெரும்பிளவு ஏற்பட்டது.

இந்தக் குளறுபடியை மாற்ற அவர்கள் கவனத்தைத் திருப்பதான் எல்லாரிலும் அதிகமாகப் பாஷை பேசுகிறவன் என்று சுட்டிக் காண்பிக்கிறான். தான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசக்கூடியவன் என்றும் மறைவாகக் கூறுகிறான். இந்த வரம் கொரிந்தியர்களுக்கு சந்தோஷமளித்திருக்கலாம். ஆனால் பவுல் இத்தகைய உயர்வான அனுபவம் கூட சத்தமிடுகிற வெண்கலத்திற்கும் ஓசையிடுகிற கைத்தாளத்துக்கும் ஒப்பானது. அதாவது தொந்தரவு கொடுக்கிற ஒரு ஒலிக்கு சமமானது என்கிறார்.

எனவே நம்மில் அன்பில்லாவிடில் நமது அசாதாரண வரங்களும் பெரிய சாதனைகளும் சபைக்கும் தேவனுக்கும் பயனற்றவை. ஆகையால் பவுல் அன்பிலிருந்து துளிர்க்காத எந்த செயலும் ஆவிக்குரிய பலனற்றது என்று அழுத்தமாகக் கூறுகிறார்.

இயற்கைக்கு உட்பட்டவர்களாகிய நம்மை இயற்கைக்கு மேற்பட்டவர்களாக மாற்றுவதுதான் ஜெபம்
– லியோனார்டு ரேவன்ஹில்

(2-ம் பக்க தொடர்ச்சி)

மணியாடர்

A. Philip NA 16718
10, Blessing Cottage, Ranipet - 631 004.
Cell No. : 95xxxxxxxx

கடிதம், கொரியர்

CN 00296
T. Jeyaraj
Chennai - 600 097
Cell No. : 98xxxxxxxx

3. அலுவலகம்

பத்திரிகை அலுவலகத்தில் நேரில் காணிக்கை செலுத்துவோர், பத்திரிகையில் அச்சிடப்பட்டுள்ள அட்டவணைப்படி காணிக்கை செலுத்தும்படி பட்சமாய் கேட்கிறேன்.

ஆண்டவருக்குச் சித்தமானால், **நவம்பர்** "உங்கள் பண்டிகைகளை என் ஆத்துமா வெறுக்கிறது" ஏசாயா 1:14; **டிசம்பர்** "காணிக்கைகளினால் தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது" லூக்கா 21:5; **ஜனவரி** "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" வெளி.22:12 என்ற வசனங்களின் படி ஆசிரியர் கடிதங்களை எழுதுவேன்.

ஆண்டவர் இயேசுவின் முதலாவது வருகையை நாம் அறிவோம். **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நீங்கள் ஆயத்தமா?** அதற்காகவே தூதன் அச்சிடப்படுகிறது என்பதை வாசகருக்கு அதிக அன்பாய் அறிவிக்கிறேன். அவருடைய வருகையைக் குறித்து ஆண்டவர் இயேசு சுவிசேஷங்களில் சொல்லிய உவமையை எனக்கு எழுதி, ரூபாய் 1200 மதிப்பிலான, தங்க ஓரம் போடப்பட்ட கொரியன் பிரின்ட் வேதாகமத்தை உங்களில் **ஒருவர்** பரிசாக பெறமாட்டீர்களா?

ஆண்டவர் இயேசு பாராட்டின விதவை

"ஆ! உடன் ஊழியரே, லுத்தர், ஜான் பனியன், வெஸ்லி முதலிய பரிசுத்தவான்களையும், சீர்திருத்தவாதிகளையும், இரத்தச் சாட்சிகளையும் நாம் நேசிக்கிறோம். நாம் அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை எழுதுகிறோம். அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம். அவர்களின் சமாதி வாசகத்தைச் சட்டமிடுகிறோம். அவர்களுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்புகிறோம். அவர்களைப் பின்பற்றுவதைத் தவிர மற்றெல்லாவற்றையும் செய்கிறோம்! நாம் அவர்களின் கடைசித்துளி இரத்தத்தைக் கண்டு களிக்கிறோம். நமது இரத்தத்தின் முதல் துளியையோ கவனமாகக் காத்துக் கொள்ளுகிறோம்!

- லியோனார்டு ரேவன்ஹில்

இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கை பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்.

ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.

அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார் மாற்கு 12:41-44; லூக்கா 21:1-4.

1. இயேசு காணிக்கைப் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்

அனனியா ..... தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான் அப்.5:1-4.

அன்பு தேவ பிள்ளையே, நாம் செய்கிற எல்லாவற்றையும் தேவன் காண்கிறார் என்பதை அறிவாயா?

2. ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்

"அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி : ஐசுவரியவான்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" மத்.19:23.

அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு : அப்படியானால், யார் ரட்சிக்கப்படகூடும் என்றார்கள்.

இயேசு, அவர்களைப் பார்த்து : மனுஷரால் இது கூடாததுதான், தேவனாலே எல்லாம் கூடும் என்றார் மத்.19:25, 26.

கவனியுங்கள், அரிதாயிருக்கும் என்றாரே தவிர முடியாது என்று இயேசு கூறவே இல்லை. அவருடைய வார்த்தையின்படி ஐசுவரியவான்கள் அதிகமாய் கொடுக்க வேண்டும்.

"சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து,

பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தை கேட்டான். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்.

யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி,

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான்" மத்.27:57-60.

2. ஏழை விதவை காணிக்கை போட்டாள்

உண்மையாய் ஊழியம் செய்யும் ஊழியர்கள் அனைவரும் தேவனுடைய எலியாக்களே! பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர் :

நீ .... கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு, ... அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார் 1 இராஜா 17:1-6.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர் :

நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; **உன்னைப் பராமரிக்கும்படி அங்கே கிருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்.**

அதற்கு அவள் : இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள்" 1 இராஜா.17:8-16 வரை வாசிக்கவும்.

கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் மாறிடவே
சுதன் அருள் புரிந்தனரே

4. தன் வறுமையிலிருந்து போட்டாள்

அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள் 2 கொரி.8:1,2.

1. தேவன் அளிக்க கிருபை
2. மிகுந்த உபத்திரவம்
3. கொடிய தரித்திரம்
4. பரிபூரண சந்தோஷம்
5. உதாரத்துவமாய் கொடுத்தார்கள்

உங்களுக்கு இவ்வித அனுபவம் உண்டா?

5. தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த தெல்லாம் போட்டுவிட்டாள்

2017-ம் ஆண்டிலிருந்து வருகையின் தூதன் ஊழியத்திற்கு ஏற்பட்ட பிரச்சனைகளை மிகவும் தெளிவாக எழுதிவந்துள்ளேன். 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் **ஒரு நாள் 10 மணியாடர் வந்தது.**

1 மணியாடர் ரூபாய் 500
2 மணியாடர் ரூபாய் 200
7 மணியாடர் ரூபாய் 100

இந்த கொரோனா நாட்களில் **10 நாட்கள் ஒரு மணியாடர் கூட வருவதில்லை.** அப்படிப்பட்ட மிகவும் நெருக்கடியான வேளையில் தேவன் சில மக்களை ஏவினார். அதில் ஒரு கடிதத்தை கீழே அச்சிடுகிறேன் :

From

SM 01889 S

கர்த்தருக்கு அன்பான வெஸ்லி தேவதாசன் ஐயா அவர்களுக்கு,

எனக்கு 85 வயது நடக்கிறது. என்னுடைய இள வயதுகளிலிருந்து வருகையின் தூதன் வாசித்து வருகிறேன். பெரிய ஐயாவின் பிரசங்கம், திருவள்ளூரில், மதுரையில் அந்த காலத்திலிருந்து பெரிய அய்யாவைப் பார்த்து பிரசங்கம் பல கேட்க முடிந்ததற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தமிழில் முதன்முதலில் வந்த கிறிஸ்தவ பத்திரிகை சிலவே. அவற்றில் தலையாய சிறந்த வழிகாட்டும் இதழ் வருகையின் தூதன்.

அந்தப் பத்திரிகை நின்று விடக் கூடாது. ஆகவே காகித, அச்சக, இதர வேலைகளுக்காக ஊழியர் ஊதியம் ரூ.10,000/- அனுப்புகிறேன்.

மேலும் பலர் இப்படி செலவினங்களை சந்திப்பார்கள் என விசுவாசிக்கிறேன்.

என் மகன், மருமகள், பேத்தி, அவள் கணவர், கொள்ளு பேரன், கொள்ளு பேத்தி ஆகியோருக்காக ஜெபிக்கவும்.

* * *

அன்புத் தாயாரின் காசோலை சம்பந்தமாக சில வாரங்கள் தொடர்ச்சியாக அவர்களோடு பேச வேண்டிய தாயிற்று. அதின் மூலம் அவர்களுடைய ஒரு மாத பென்சனையே இந்த ஊழியத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

தேவ பிள்ளையே, தேவன் உங்களை ஏவவில்லையா? தூதன் ஊழியத்தைக் குறித்து இவ்வித பாரம் உங்களுக்கு உண்டா?

மூன்றுவிதமான சாட்சிகள்

1. ஒரு சகோதரி மாதந்தோறும் ரூபாய் 100 காணிக்கை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வயதின் காரணமாக பிற்பாடு வருட ஆரம்பத்தில் ரூபாய் 1200 மணியாடர் அனுப்பி வந்த இவர்கள், இப்பொழுது வங்கி வழியாக அனுப்பி வருகிறார்கள்.

ஒரு சகோதரன் மாதந்தோறும் ரூபாய் 50 அநேக ஆண்டுகளாக அனுப்பிக் கொண்டிருந்தார். சமீப காலமாக ஆண்டுக்கு ஒரு முறை ரூபாய் 600 அனுப்பி வருகிறார்.

2. மாதந்தோறும் வருகையின் தூதன் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிற சிலர் கடந்த ஆண்டு கொரோனா காலங்களில் அனுப்பவில்லை. அதில் ஒருவர் 3 மாதங்கள் சேர்த்து ரூபாய் 600 அனுப்பியிருந்தார். இது போல இன்னமும் சில தேவனுடைய பிள்ளைகள் உண்டு.

3. 1991-ம் ஆண்டு தூதன் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். அன்று முதல் இந்த சகோதரரை நான் அறிவேன். ஆரம்ப நாட்களில் ரூபாய் 250 மாதந்தோறும் டிமான்ட் டிராப்ட் (D.D) அனுப்பி வந்தார். பிற்பாடு காணிக்கையில் உச்சம் தொட்டார். மாதா மாதம் இறுதி நாள், அது ஞாயிற்றுக் கிழமையானாலும், இரவானாலும் அவர் வங்கி வழியாக காணிக்கை அனுப்பிய விவரம் எனது மொபைல் போனில் தெரியும்.

இந்த சூழ்நிலையில் அவர் பணி நிறைவு பெற்றார். அப்பொழுது அவர் எழுதிய கடிதத்தின் முதல் பகுதியை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன்.

05.12.2018

Dear brother - in - Christ,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பின் நாமத்தில் என்னுடைய வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த 30.11.2018 அன்று வேலையிலிருந்து ஓய்வு பெற்றேன். கர்த்தர் கடந்த 35 வருடங்கள் எனக்கு நல்ல ஞானத்தையும் கிருபையையும் கொடுத்து ஆசீர்வதித்தார். அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

* * *

கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமம் மட்டும் மகிமைப்படுவதாக. இவர் வேலை செய்யும்போது மாதா மாதம் வருகையின் தூதன் ஊழியத்திற்கு அனுப்பி வந்த அதே காணிக்கையை, தேவ தயவாய் இன்றுவரை அனுப்பி வருகிறார்.

ஒருவிசை தொலைபேசியில் என்னோடு பேசும்போது, காணிக்கையை fifty percent (பாதியாக) ஆக குறைக்கலாமா என்று எண்ணினேன், ஆனால் விருப்பமில்லை என்றார்.

இப்பேர்பட்ட அன்புள்ள தேவனுடைய பிள்ளைகளுக்காக நான் தேவனை அதிகமாக ஸ்தோத்தரிக்கிறேன். இது போன்று மாதா மாதம் தேவனுடைய பிள்ளைகள் அனுப்பும் அன்பான காணிக்கைகளினாலும், இன்னமும் சிலர் இடைக்கிடையே மிகவும் உதாரத்துவமாக அனுப்பும் அன்பின் காணிக்கைகளினாலேயே வருகையின் தூதன் மாதந்தோறும் அச்சிடப்பட்டு உங்கள் கைகளில் வந்து சேருகிறது என்பதை வாசகருக்கு திரும்பவும் ஒரு விசை அன்புடன் அறிவிக்கிறேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

ஜென்ம சுபாவ மனிதன் வெறுக்கும் இதுதல் காரியமே ஜெபம்.
ஆவிக்குரிய மனிதன் விரும்பும் இதுதல் காரியம் ஜெபமே
– ராபர்ட் மரே மச்செயின்

(7-ம் பக்க தொடர்ச்சி)

வருகையின் தூதன் ஊழியத்தின் தேவைகளை கடைசி தடவையாக எழுதுகிறேன்

சுமார் 20 வருடங்களாக வருகையின் தூதன் அலுவலகம் பராமரிக்கப்படவில்லை என்று அநேகந்தரம் எழுதினேன். சந்தா கட்ட அலுவலகத்திற்கு வருவார்கள், ஆனால் அலுவலக தேவை பற்றி விசாரிக்கமாட்டார்கள். கடைசியாக சென்னையை சார்ந்த ஒரு அருமையான போதகர் குடும்பம் இதனை செய்தது.

இரண்டாவதாக "**தேவனுடைய வீடு**" வேலைகள் முடியவில்லை என்று எழுதினேன், அதே போதகர் குடும்பம், அவர்களால் இயன்றவைகளைச் செய்தார்கள். கைப்பிடி சுவர்களை கட்டி, பூசப்படாத பகுதிகளை பூசி தந்தார்கள்.

இந்த சூழ்நிலையில் 2020-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மகள் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது. என்னுடைய கையில் கொஞ்சமும் பணம் இல்லாதிருந்தது. ஓய்வுபெற்ற, எனது மிஷனெரி நண்பர் ஒருவரை அணுகினேன். கடந்த காலங்களில் கட்டட வேலைகளிலும் அவர் உதவி செய்துள்ளார். அந்த ஓய்வு பெற்ற மிஷனெரி தனது மகளுடைய முதல் மாத சம்பளம் ரூபாய் 25,000 அத்துடன் ஊழியங்களை தாங்கும் ஒரு சகோதரன் அளித்த ரூபாய் 25,000 ஆக ரூபாய் 50,000 அன்பளிப்பாக அளித்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அந்த மிஷனெரி நண்பர் என்னைப் பார்த்து இவ்விதமாக கூறினார்:

"**என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம்பண்ணுவேன்**" 1 சாமு2:30.

"**தேவனுடைய வீடு**" பெயின்டிங் செய்யப்படவில்லை ஆனால் ஒரு பொது கழிப்பறை மாத்திரம் செப்பனிடப் பட்டது. 2020-ம் ஆண்டு அக்டோபர் மாதம் **ஒரு கொத்தனார், ஒரு நாள் சம்பளம் ரூபாய் 1000.**

ஒரு சகோதரன் சகல திருமண வேலைகளையும் செய்து தந்தார். அவருடைய கடித தாளில் (Letter Pad) ஒவ்வொன்றுக்கான செலவையும் தனித் தனியாக மேலிருந்து வரிசையாக எழுதித் தந்தார். சுருக்கமாக அதை கீழே எழுதுகிறேன்:

முன்புறம் துணி பந்தல், டெக்க ரேஷன், ஆர்ச், மேஜை, செயர், மாடியில் சாப்பாட்டுக்காக ஷீட் பந்தல், சாப்பாடு, ... ஆட்டோ வாடகை வரை **ரூபாய் 67,625.**

அந்த நாட்களில் அதிகமான மழை பெய்து கொண்டிருந்தது. கேரளாவைச் சார்ந்த ஒரு **போதகர்** திருமணத்தன்று காலை 10.00 மணியளவில் எனக்கு போன் பண்ணி, அங்கே கிளைமெட் (climate) எப்படியிருக்கிறது என்று விசாரித்தார். திருமணத்தில் கலந்து கொண்ட ஒரு **போதகர்** என்னைப் பார்த்து, ஒரு துளி மழை கூட இல்லை பார்த்தீர்களா? என்றார். தேவனுக்கே மகிமை.

ஆண்டவர் அற்புதம் செய்யும் விதமே வித்தியாசமானது. "அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி:

இங்கு ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்.

இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்.

அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு **மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்** யோவான் 6:8-13.

"**தேவனுடைய வீடு**" பெயிண்டிங் பண்ணப்பட வேண்டும். நமது அலுவலக கட்டடத்தின் பின்புறம் பஞ்சாப் நேஷனல் வங்கி இருக்கிறது. இரண்டுக்கும் மத்தியில் உள்ள நமது மதில் சுவர் இடிந்து விழுந்துவிட்டது. இவைகளைச் செய்ய சுமார் **இரண்டு லட்சம்** தேவை என்று எண்ணுகிறேன்.

தேவனுடைய பிள்ளைகள் இவைகளைக் குறித்து விசாரிக்க வேண்டுமா? தேவனுடைய வசனம் என்ன சொல்லுகிறது?

"அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

பசியாயிருந்தேன், ... தாகமாயிருந்தேன், வஸ்திரமில்லாதிருந்தேன். ..... வியாதியாயிருந்தேன், என்னை **விசாரிக்க வந்தீர்கள்**; .... என்பார்.

அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராக கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? என்பார்கள்.

அப்பொழுது ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்" மத்தேயு 25:34-40.

இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் என்ன சொல்வார் என்பதை எழுத விருப்பமில்லை.

ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் (யாக் கோபு 4:15) **2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் புதிய முகவரி பட்டியல் பயன்படுத்தப்படும் என்பதை வாசகருக்கு ஜெபத்தோடு அறிவிக்கிறேன்.**

2022-ம் ஆண்டு மாதந்தோறும் பத்திரிகை அனுப்ப

1. வருகையின் தூதன் ஊழியத்திற்காக தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.

2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒருமுறை குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

3. உங்கள் மகிழ்ச்சியான தினங்களில் ஆண்டவருடைய ஊழியத்திற்கு உதாரத்துவமான காணிக்கை அனுப்புங்கள்.

கடைசியாக கர்த்தருடைய வருகையைப் பற்றி எழுதி ஆசிரியர் கடிதத்தை முடிக்கிறேன்.

"**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது** வெளி.22:12.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10-01; 02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்க நாட்கள் முடிந்துபோம். ஏசா. 60:20.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

நமது **மீட்பர்** சிலுவையில் மரித்தது அவரது எல்லையற்ற **அன்பின்** நிரூபணம். பெற்றோர், குழந்தைகள், கணவன், மனைவி, மிகச்சிறந்த நண்பர் யாவரைக் காட்டிலும் தமது இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களை அவர் அதிகமாக **நேசிக்கிறார்.**

ஒரு அஸ்திபாரத்தில் கற்கள் சிமெண்டால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பது போல நீங்கள் அவருடன் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

கடைசி மட்டும் முடிவின்றி அவர் நேசிக்கிறார். அந்த **அன்பில்** ஒரு பகுதியை மட்டும் நாம் உணருகிறோம்.

நமது இருதயங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் **அன்பு** சர்வலோக நிவாரணியாயிருக்கிறது. அனைத்து வியாதிகளுக்கும் கிறிஸ்து மருந்தாயிருக்கிறார்.

அன்பு உருக்கும் தன்மையுடையது. நியாயப்பிரமாணம் சம்மட்டியைப் போல உடைக்கும் தன்மையுடையது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason